## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 52/2015

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **19.01.2026** |
| **பெயர்** | **சின்னையா** |
| **த/பெ** | **வெங்கடையா** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.52. எ.எம்.**
**குறுக்கு விசாரணை–**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. சாட்சியம் அளிக்க யார் அழைத்ததன் பெயரில் வந்தேன் என்றால் 1ம் பிரதிவாதி அழைத்ததன் பெயரில் வந்துள்ளேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். 1ம் பிரதிவாதி சிறு, சிறு வேலைகள் செய்ய என்னை அழைப்பார் நானும் வேலை செய்துவிட்டு அவர் கொடுக்கும் தொகையை வாங்கி வருவேன். எனக்கு சொந்தமாக எந்த நிலமும் இல்லையா என்றால் எதுவும் இல்லை.

2. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, இடம் மட்டும் தெரியும். சுமார் கால் காணி இருக்கும். 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதியின் குடும்பத்தார் சொத்தினை விற்றுவிட்டார்கள். 24 செண்ட் விற்கப்பட்டதா என்றால் தெரியாது. தாவா சொத்தை முதலில் யார் பயிர் செய்து வந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் செங்கல்வராயரெட்டியார் பயிர் செய்து வந்தார். செங்கல்வராயரெட்டியார்க்கு எவ்வாறு சொத்து வந்து சேர்ந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 24 செண்ட் நிலத்தை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் 3ம் பிரதிவாதியான ஜனார்தனரெட்டிக்கு விற்பனை செய்துவிட்டார். எந்த வருடம் விற்பனை செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

3. 1ம் பிரதிவாதியிடம் தற்போது எவ்வளவு சொத்து உள்ளது என்றால்

தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பத்திரங்களை எதையும் நான் பார்த்ததில்லை என்றால் பார்த்ததில்லை. மேலே பயிர் செய்ததாக குறிப்பிட்டது சொந்தமாகவா அல்லது குத்தகைக்கா என்றால் சொந்த நிலம் என்ற முறையிலேயே பயிர் செய்து வந்தார். இந்த வழக்கை தாக்கல் செய்ததாக 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் கூறியே எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. செங்கல்வராயரெட்டியாரின் தங்கை கமலம்மாள் ஆவார். கமலம்மாளின் மகள் தான் இவ்வழக்கின் வாதி ஆவார்.

4. ரத்தினாபாய்க்கு திருமணம் ஆகி கணவர் ஊருக்கு சென்றுவிட்டதாக என் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது உண்மையா என்றால் திருமணம் ஆன பிறகு மதுராந்தகம் அருகே உள்ள ஊருக்கு சென்றுவிட்டார் வழக்கு சொத்திற்கு அவ்வபோது வந்து செல்வார். அவ்வாறு வரும்போது எங்கு தங்குவார் என்றால் 1ம் பிரதிவாதியின் வீட்டில் தான் தங்குவார். 3ம் பிரதிவாதி இறந்த பிறகு அவரின் மனைவி கலா என்பவர் பயிர் செய்வதில்லை என்றால் சரிதான். பட்டா வாதியின் பெயரில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் பார்த்த விவரங்களை தான் என் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நான் விரோதம் செய்து கொள்ள முடியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கீழ் நான் வேலை செய்து வந்ததால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.11. p.m.**